# குளியாப்பிடிய பிரதேச சபை

## குருநாகல் மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 14 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 செப்டம்பர் 30 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடபட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு குளியாப்பிடிய பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-----------------------------------------------------------------

1.3.1 தேறிய சொத்துக்கள் குறைவடைதல்

-----------------------------------------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தேறிய சொத்துக்களின் நிலைமை ரூபா 160,060,482 ஆகக் காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டிற்கான தேறிய சொத்துக்கள் ரூபா 206,402,002 தொகை ஆகியமையால் தேறிய சொத்துக்களில் ரூபா 46,341,520 இற்கான குறைவடைதல் ஒன்று காட்டப்பட்டிருந்தது.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

--------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய வரி என நிதிக் கூற்றுக்களில் கூட்டுத்தொகை ரூபா 254,516 தொகை ஒன்று காட்டப்பட்டிருந்த போதும் உள்ளவாறாக அப்படி செலுத்த வேண்டிய வரி ஒன்று காணப்படாமையால் செலுத்த வேண்டிய வரி ரூபா 254,516 தொகை ஒன்று கணக்குகளில் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 52,007 இனால் நிதிக் கூற்றுக்களில் மிகையாக காட்டப்பட்டிருந்தது. அதே போல்

மீளாய்வாண்டிற்கான நிர்மான வேலை உதவி ரூபா 36,431,161 இனால் நிதிக் கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிர்மாண வேலைகளுக்கான செலவுகள் நிதிக் கூற்றுக்களில் ரூபா 7,391,118 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தது.

(ஈ) குளியாப்பிடிய நகர சபையின் இணக்கத்துடன் ரூபா 1,204,619 தொகை ஒன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த தகனசாலை மற்றும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தில் இருந்து சபைக்குக் கிடைத்திருந்த ரூபா 800,000 பெறுமதியான ஜீப் வண்டி ஒன்று என்பன சபையின் நிதிக் கூற்றுக்களுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டிற்கான முத்திரை கட்டணம் பில் போடப்பட்டவை ரூபா 31,665,599 இனால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டிற்கான சம்பள மீளளிப்பு பெறுமதி ரூபா 236,114 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அதே போல வருட இறுதியில் கிடைக்க வேண்டிய சம்பள மீளளிப்புத் தொகை ரூபா 355,787 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

1.3.3 எதிர்பாராத பொறுப்புக்கள்

-----------------------------------------

பிரதேச சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள ஊழியர்கள் தொடர்பாக சபையினால் ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை முறைப்படி செலுத்தப்படாமையால் மீளாய்வாண்டு இறுதி வரை அந் நிதியத்திற்கு செலுத்த வேண்டிய மீதி ரூபா 1,686,472 ஆக காணப்பட்டது.

1.3.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு 06 கணக்கு விடயங்களில் கணக்குகளின் பிரகாரம் மீதி மீதி மற்றும் தொடர்புடைய பதிவேட்டின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 4,538,284 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

1.3.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------------

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 87,975,815 ஆக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 87,806,080 இற்கான காலப்பகுப்பாய்வுகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 66,613,622 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 21,569,393 தொகையும் வருடம் 1 இற்கும் 3 இற்கும் இடைப்பட்ட காலத்தை சேர்ந்தவையாகும்.

1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

--------------------------------------------------------------

தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமை

----------------------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 154,476,420 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக விரிவான பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 44,903,732 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,816,679 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 40,087,053 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது. நிதி விளைவிற்கு ரூபா 14,892,793 இற்கான மூலதன உதவி மற்றும் ரூபா 105,757,756 இற்கான மூலதன செலவுகளை சீராக்கல் மேற்கொண்ட போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 45,961,231 இற்கான பற்றாக்குறை ஒன்றாக மாறியுள்ளது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த மீண்டுவரும் வருமானம் ஆகிய ரூபா 103,177,653 இல் நூற்றிற்கு 91 ஆகிய ரூபா 93,881,335 தொகையும் உருவாக்கிய வருமானம் அல்லாத நீதி மன்றத் தண்டப் பணம், முத்திரைக் கட்டணம் சம்பள மீளளிப்புக்கள் போன்ற படிகள் தன்மையுள்ள பெறுவனவுகள் அடங்கியுள்ள மூலதன வருமானமாகிய ரூபா 14,456,043 இற்கான தொகை கமநெகும, மகநெகும போன்ற மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் மூலம் அதிகார பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகளுக்காக கிடைத்த பணத்தினை அடங்கியுள்ளன.

(ஆ) மீளாய்வாண்டிற்கான மொத்த மீண்டுவரும் செலவாகிய ரூபா 58,273,920 இல் நூற்றிற்கு 55 ஆகிய ரூபா 31,835,567 தனிப்பட்ட சம்பள செலவு ஆக காணப்பட்டதுடன் அவற்றில் நூற்றிற்கு 72 ஆகிய ரூபா 22,785,721 இற்கான சம்பள மீளளிப்பு என உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைத்து வேறு வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மூலதன செலவாகிய ரூபா 105,757,756 இல் நூற்றிற்கு 64 ஆகிய ரூபா 67,654,820 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது. அத்துடன், மீதி நூற்றிற்கு 36 ஆகிய ரூபா 38,102,936 தொகை மகநெகும, கமநெகும ஆகிய மூலங்கள் மீது வேறு நிறுவனங்களின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி வேலைகள் அடங்கியுள்ளன.

2.3 வருமான நிருவாகம்

-------------------------------

2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

-----------------------------------------------------------------

வியாபார அனுமதிப்பத்திரம், கடை வாடகை, குத்தகை போன்ற வருமானங்கள் வெளிக்களத்தில் சேகரிப்பதற்காக சட்டரீதியான ஏற்பாடுகள் விதித்தில்லாத போதிலும், சபையின் வருமானம் சேகரிப்பாளர்களினால் ஆண்டு பூராகவும் அவ்வாறான வருமானம் வெளிக் களத்தில் சேகரிக்கப்பட்டிருந்தது.

2.3.2 வீதவரி

------------

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசம் தொடர்பான வீதவரி நிலுவை ரூபா 196,198 ஆக காணப்பட்டதுடன், அத்தொகை ரூபா 220,000 வருடாந்த பில் போடப்பட்டவைகளில் நூற்றிற்கு 89 மாத்திரமாகும். ஹொரம்பாவ உப அலுவலக அதிகார பிரதேசம் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியில் வீதவரி நிலுவை ரூபா 186,796 ஆக காணப்பட்டதுடன், 1153 அலகுகளுக்கான வருடாந்த பில் போடப்பட்டவைகள் ரூபா 446,016 ஆக காணப்பட்டமையால் நிலுவை வருடாந்த பில் போடப்பட்டவைகளின் நூற்றிற்கு 42 மாத்திரமே. 1988 பிரதேச சபை(நிதி மற்றும் நிருவாகம்) விதி கோவையின் விதி 32 – 42 வரையான விதிகளின் பிரகாரம் நிலுவை வீத வரியினை காலாண்டை அடிப்படையாக கொண்டு நிலுவை பட்டியல் தயாரித்து குறிப்பிட்ட அறிவித்தல் வழங்கி பின்னர் ஆதனங்களை தடைசெய்து நிலுவை வீதவரி அறவீடு செய்யும் செயற்பாட்டினை அமுல் நடத்தியிருக்கவில்லை.

2.3.3 வர்த்தக வரி மற்றும வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

---------------------------------------------------------------------------------------------

1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதிக் கோவையின் விதி 59 – 67 வரையான பிரிவுகளை மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 150(1) மற்றும் 152(1) பிரிவுகளின் பிரகாரம் கைத்தொழில் உரிமையாளர்கள் மற்றும் வியாபாரிகளிடம் குறிப்பிட்டுள்ளவாறு வரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.4 நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரை கட்டணம்

---------------------------------------------------------------------------------------

மாகாண சபை பிரதான செயலாளரிடம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 2,363,995 ஆகும்.

3 செயற்பாட்டு மீளாய்வு

----------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

-------------------------------------------------

சபையினால் 2008 – 2013 காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த கட்டட விண்ணப்பங்கள் 1086 இல் மீளாய்வாண்டு இறுதி வரை இணக்கச் சான்றிதழ் பெற்றிருக்காத 1003 இடங்கள்

காணப்பட்டன. அதே போல கட்டட அனுமதிப்பத்திரம் கால நீடிப்பு மேற்கொள்ளப்படாமை பற்றி அல்லது இணக்கச் சான்றிதழ் இன்றி அக்கட்டடங்களை பயன்படுத்துவதனை எதிர்த்து அல்லது சபையினால் நடவடிக்கை ஏதும் மேற்கொண்டிருக்கவில்லை. அத்துடன், இணக்கச் சான்றிதழ் கட்டணம் மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்தல் தொடர்பாக ஏற்பாடுகளும் சபையினால் ஏற்படுத்தியிருக்கவில்லை.

3.2 சபைக்கு எதிராக தாக்கல் செய்திருந்த வழக்கு

-----------------------------------------------------------------------------

(i) ‘‘ஜாதிக சவிய கமநெகும’’ 2010 நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெவகம கம்மத நுழை பாதை கொங்கிரீட் பண்ணும் போது ஏற்பட்டிருந்த பிரச்சினை ஒன்று தொடர்பாக சபைக்கு எதிராக போடப்பட்டிருந்த வழக்கு தொடர்பாக முன்னேற்றம் பற்றி அறிவித்திருக்கவில்லை.

(ii) 1988 ஆண்டிற்கான இறைச்சிக் கடை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக காணப்பட்ட 9049 இலக்க வழக்கு தீர்ப்பின் பிரகாரம் ஒரு நாளைக்கு ரூபா 1800 வீதம் ஆன கட்டணமொன்று ஆண்டு பூராகவும் குறிப்பிட்ட முறைப்பாட்டாளருக்கு சபையினால் செலுத்தப்பட வேண்டும் என கட்டளை இடப்பட்டிருந்தது. அந்த தீர்ப்பிற்கு எதிராக சபையினால் மேன்முறையீடு நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு ஒன்று கோவைப்படுத்தப்பட்டிருந்தது. அத்துடன் அம் மேன்முறையீட்டுக்காக ரூபா 100,000 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. சபையினால் சமர்பிக்கப்பட்டிருந்த மேன்முறையீடு நீதிமன்றத்தினால் 2014 ஜனவரி 30 திகதி தள்ளுபடி செய்ததன் காரணமாக குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்துவது அபாய நிலையில் காணப்பட்டது.

3.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்

-------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 செயற்பாட்டு உதவியின் கீழ் ரூபா 3,500,000 இற்கான தெகை ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்த போதும் தங்கொல்லல வத்த குடிநீர் செயற்திட்டம் மற்றும் கடுபொத தெபரவெவ நீர் செயற்திட்டங்கள் உரிய காலத்தில் வேலையை மேற்கொள்ளாமல் மற்றும் ஏற்பாடுகள் போதியளவு இன்மையின் காரணமாக மீளாய்வாண்டு இறுதி வரையும் நீர் செயற்திட்டங்கள் செயற்படு நிலையில் காணப்படவில்லை.

(ஆ) தல்லியத்த மற்றும் கொடகம செயற்திட்டங்களுக்காக 2012 அக்டோபர் 15 திகதி சபையினால் ரூபா 438,180 இற்கான கொள்வனவு செய்திருந்த PVC குழாய்கள் கணக்காய்வு திகதி வரை குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படாமல் சபையில் பாதுகாப்பற்ற நிலையில் குவிக்கப்பட்டு காணப்பட்டது.

3.4 திண்ம கழிவுப் பொருட்கள் முகமைத்துவம்

----------------------------------------------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் சேகரமாகும் கழிவுப் பொருட்களில் சேதன கழிவுப் பொருற்கள் சேதனப் பசளை உற்பத்தி செய்யும் கருமத்திற்காக நகர சபை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்திற்கு ஒப்படைத்திருந்ததுடன், ஏனைய கழிவுப் பொருட்களை வகைப்படுத்தப்படாமல் தனியாருக்கு சொந்தமான 3 காணிகளில் குழி முறைமையின் கீழ் குவிக்கப்பட்டுள்ளது.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்